# இந்தி எதிர்ப்பு நாள்

## தமிழ்நாடு முழுதும் கொண்டாட்டம்.

## கறுப்புக்கொடி ஊர்வலங்கள் கண்டனத்தீர்மானங்கள்.

—:o:—

### சென்னை.

சென்னை, ஜூலை 2.

நேற்று 1-7-38-ல் சென்னை மயிலாப்பூரில் இந்தி எதிர்ப்பு ஊர்வலமும் பொதுக்கூட்டமும் வெகு சிறப்பாக நடைபெற்றது. மந்தவெளி, கொச்சிக்குப்பம், தலையாரித்தெரு, பெரிய கடைத்தெரு, மல்லீப்பூச்சேரி, மயிலாப்பூர் சுயமரியாதைச் சங்கம் முதலிய இடங்களிலிருந்து ஊர்வலக் கோஷ்டிகள் கறுப்புக் கொடிகளையும், தோரணச் சீலைகளையும் ஏந்திக்கொண்டு எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்தார்கள். பிறகு மயிலாப்பூர், மீர்சாயப்பேட்டை, ராபர்ட்சன் பேட்டை, இராயப்பேட்டைகளின் முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலம் பெருந்திரளாகச் சென்றது. இந்தி வீழ்க, தமிழ் வாழ்க, என்று கோஷம் வானைப் பிளந்தது. ஊர்வலத்தை ஒட்டி ஒரு பஜனைக் கோஷ்டியும் தொடர்ந்து சென்றது. பஜனையில் பல சிறுமிகள் கலந்து வழி நெடுக பாடிக்கொண்டு சென்றார்கள். ஊர்வலத்தோடு போலீசார் வந்தார்கள். கடைசியாக ஊர்வலம் தோழர் ஸ்டாலின் ஜெகதீஸ் அவர்கள் தங்கியிருக்கும் இடத்திற்குச்சென்று சற்று நேரம் தங்கி பிறகு மீண்டும் மயிலாப்பூர் வந்து சேர்ந்தது. மயிலாப்பூர் 40-வது டிவிஷன் மந்தவெளி கடைத்தெருவில் எல்லாக் கடைகளும் அடைக்கப்பட்டன. கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் அன்று வேலை நிறுத்தம் செய்தது குறிப்பிடத்தக்கது. இந்த ஊர்வலத்தைப்போல இதற்கு முன் எப்பொழுதும் நடைபெறவில்லை என்று மயிலாப்பூர் வாசிகள் பேசிக் கொள்கிறார்கள். இந்த ஊர்வலத்தை முன்னின்று வெற்றிகரமாக நடத்திய தோழர் சர்கஸ் எம். கே. துரைசாமி நாயக்கர் அவர்கள் ஆவார்.

மாலை 6 மணிக்கு மயிலாப்பூர் மந்தை வெளி ரமண குருகான சபை மைதானத்தில் ஒரு பொதுக் கூட்டம் கூடியது. பெருந்திரளான ஜனங்கள் வந்திருந்தார்கள். வழக்கம்போல போலீசாரும் வந்திருந்தார்கள். போலீஸ் டிப்டி கமிஷனரும் வந்தார். கூட்டத்திற்கு சோழவந்தான் தோழர் டி. ஆவடையப்பன் அவர்கள் தலைமை வகித்தார். தோழர்கள் கும்பகோணம் எஸ். கே. சாமி, அறுப்புக்கோட்டை வீரையா இருவரும் இந்தியையும் அரசாங்கத்தின் அடக்கு முறைகளையும் கண்டித்துப் பேசினார்கள். இடையில் மழை பெய்தது. ஆனால் ஜனங்கள் கலைந்துவிடவில்லை. கடைசியாக இந்தியைக் கண்டிப்பதாகவும், தடியடி முதலிய அடக்கு முறைகளைக் கண்டிப்பதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வைஸ்ராய்க்கும், கவர்னருக்கும் அனுப்பும்படி முடிவு செய்யப்பட்டது. பின்னர் தோழர் எம். கே. பாலசுந்தரம் அவர்களால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு கூட்டம் கலைந்தது.

(ஒ. கி.)

### திருவல்லிக்கேணி

1-7-38ல் திருவல்லிக்கேணி மல்லன் பொன்னப்ப முதலித் தெருவிலுள்ள சுப்பிரமணியர் கோவிலுக்கெதிரில் இந்தி எதிர்ப்பு நாள் மிக்க சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாலை ஐந்து மணிக்கு 50 கறுப்புக் கொடிகளுடன் ஊர்வலம் புறப்பட்டது. பல சேவகர்களும் சேவக அதிகாரிகளும் கூட்டத்தைத் தொடர்ந்து வந்தனர். நான்கு தெருக்கள் கறுப்புக் கொடிகளால் அழகு செய்யப்பட்டிருந்தன. ஊர்வலம் பல தெருக்களைச் சுற்றி சுப்பிரமணியர் கோவிலுக்கெதிரில் முடிந்தது. அங்கு இந்தி எதிர்ப்புக்கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு தோழர் மாணிக்கவாசகர் தலைமை வகித்து இந்தியால் தமிழுக்குண்டாகும் கெடுதியை விளக்கிக் காட்டினார். ஜனாப் அகமதுவும் இந்தியைக் கண்டித்துப் பேசினார். வித்துவான் வி. மு. ஆறுமுகனார் கீழ்க்கண்ட தீர்மானங்களைக்கொண்டுவந்தார்.

1. சென்னை மாகாணத்தில் பெரும்பாலோரது எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் இந்திமொழியைக் கட்டாயபாடமாகப் பாடசாலைகளில் புகுத்துவதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

2. இந்தியை இங்கு நுழைப்பதில் தங்களுக்குள்ள வெறுப்பைக்காட்டும் தமிழரை அடக்கு முறைகளைக் கொண்டு (அடக்கு முறைகளை வெறுத்தவர்களே) அடக்குவது நியாயமாகாது. ஆகையால் அதனையும் இக்கூட்டம் கண்டிக்கிறது.

இத்தீர்மானங்களைக் கூட்டத்தில் படித்துக்காட்டி இதனை எதிர்ப்பவர்கள் கையைத் தூக்கும்படி கேட்டார் யாரும் கையைத் தூக்கவில்லை. ஆகையால் ஒரே உள்ளமாக தீர்மானங்கள் நிறைவேறின. மழை பெய்தும் கூட்டம் வீட்டின் ஓரங்களிலும் திண்ணைகளிலும் குடைகளைப் பிடித்துக்கொண்டும் கலையாமல் நின்றுகொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. தலைவர் குடை பிடித்துக்கொண்டு சொற்பொழிவாற்றினர். வணக்கம் கூற 7-30 மணிக்குக்கூட்டம் இனிது முடிந்தது.

(ந. கி.)

### பெரம்பூர்.

பெரம்பூர், ஜூலை. 2.

1—7—38ல் சென்னை பெரம்பூர் பார்க்ஸ் ஒத்தவாடை தெருவிலிருந்து மாலை 5-மணிக்கு இந்தி எதிர்ப்புக் கொண்டாட்டங்களைக்குறித்து தோழர் ராஜாராம்நாடார் அவர்கள் தலைமையில் 100க்கு மேற்பட்ட கறுப்புக்கொடியும் இந்தி எதிர்ப்புவார்த்தைகளடங்கிய 30போர்டுகளும் கைகளில் தாங்கிக்கொண்டு இந்தி ஒழிக! தமிழ் வாழ்க! என்ற கோஷத்துடன் சுமார் 100க்கு மேற்பட்ட பாலயர்கள் புறப்பட்டு முக்கிய தெருக்கள் வழியாக ஊர்வலமாக வந்தார்கள். இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டவர்களும் ஊர்வலத்தில் தலைமைவகித்து நடத்தினவர்களும் 23 வயதுக்குட்

(தொடர்ச்சி 4ம் பக்கம் பார்க்க)

?
பொடி.
5½, வண்ணாரப்பேட்டை மதராஸ்

## இந்தி எதிர்ப்பு நாள்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட பால்யர்களாயிருந்தது மிகவும் பாராட்டத்தக்கது. ஊர்வலத்தில் ஐந்தாறு தெருக்கள் வரையும் செம்பியம் போலீஸ் இன்ஸ்பெக்டரவர்கள் இரண்டு போலீசாருடன் கண்காணித்து வந்து ஊர்வலம் முடிவடையும் இடத்திற்கு சமீபம் வந்ததும் இன்ஸ்பெக்டரவர்கள் ஊர்வலத்தை நிறுத்தி சில கேள்விகள் கேட்டார். அதற்கு ஷ ஊர்வலத்தை தலைமை வகித்து நடத்தி வந்த தோழர் ஆர். ராஜாராம் நாடார் என்பவர் தக்க பதில் கூறினார். இக்கேள்விகள் முடிந்ததும் இன்ஸ்பெக்டரவர்கள் ஊர்வலத்தை நடத்துங்கள் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள்.

ஷ ஊர்வலம் ஆரம்பிக்கப்பட்ட இடம் வந்து சேர்ந்ததும் தலைவர் ராஜாராம் அவர்கள் கூட்டத்திற்கு வந்த அன்பர்கள் அனைவர்களும் இடை இடையில் மழை பெய்தும் பொருட்படுத்தாது இறுதிவரையும் முயற்சியுடன் ஊர்வலத்தை நடத்தி வைத்ததற்காக எல்லோருக்கும் நன்றி கூறியும் தாய்மொழி மீட்சிக்காக 62 நாட்களாக உண்ணா நோன்பிருக்கும் வீரத்தியாகி ஸ்டாலின் ஜெகதீஸ் அவர்களைப் பாராட்டுவதாகவும் தாய்மொழிக்காக சத்தியாக்கிரகம் செய்து சிறை சென்றும் தண்டனையடைந்துமிருக்கிற வீரர்களைப் பாராட்டியும், நம் இயக்கத்தின் காரியக்கமிட்டித்தலைவர்களின் தீர்மானப்படி அவ்வப்பொழுது ஆவன செய்ய வேண்டுமென்றும் யாதொரு கலாட்டா இல்லாமல் கூட்டம் அமைதியாக நடந்ததைப்பாராட்டியும் 200 பேர் வரையும் கூடியிருந்த கூட்டத்தினர்களைக் கேட்டுக் கொண்டும் தலைவர் வந்தனோபசாரங்கூற கூட்டம் இனிது முடிந்தது. கூட்டம் முடிவடையும்போது சுமார் 9 மணியிருக்கும். இது தமிழர்களுக்குள் மிகுந்த பரபரப்பையுண்டாக்கியிருக்கிறது.

இன்று காலையில் செம்பியம் போலீசாரும் இராமலிங்கபுரம் சங்கரபத்தன் தெரு முன்சீப் துரைசாமிமுதலியாரும் மேற்படி கூட்டத்தை முன் தினம் நடத்தின ராஜாராமநாடாரிடம் வந்து விஷயங்களை விசாரித்து குறிப்பெழுதிக்கொண்டு போயிருக்கிறார்கள்.

### துலுக்கன்தோட்டம்.

துலுக்கன்தோட்டம், ஜூலை 1

சென்னை துலுக்கன்தோட்டத்திலிருந்து ஸ்டாலின் படத்துடனும், தமிழ்க்கொடிகளுடனும் புறப்பட்ட சுமார் 100பேர்கள் கொண்ட ஊர்வலம் ராயப்பேட்டையில் ஸ்டாலினுக்கு மாலையிட்டுத்திரும்பி மாலை 6 மணிக்கு இன்னும் இரண்டு பேட்டைகளிலிருந்துவந்த ஊர்வலங்களுடன் துலுக்கன் தோட்டத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த வெளியேவந்து சேர்ந்தது. பின்னர்மழை வந்தபோதிலும் ஒருவரும்கலையாமல் கூடி விட்டார்கள்.

அவ்வெளியில் ஒரு கட்டாய இந்தி எதிர்ப்புக்கூட்டம் ஒன்று பண்டிதர் கந்தசாமிபிள்ளை அவர்கள் தலைமையில் கூடிற்று. அவ்வமயம் கல்குரிச்சி வெள்ளாளப்பட்டிதோழர்முத்து அவர்களும், பண்டிதர் மறை திருநாவுக்கரசு அவர்களும், தோழர் பரசுபாணி அவர்களும் விளக்கமாகவும், உருக்கமாகவும் கேட்போருக்கு உணர்ச்சி ததும்பும்படியுமாக சுமார் 2 மணிநேரம் பேசியபின் தலைவரின் அழகிய முடிவுரையுடனும் கூட்டம் கூட்டியவர்களின்வந்தனோபசாரத்துடனும் கூட்டம் இனிது கலைந்தது.

மழை இடைவிடாமற் பெய்தும் மக்களும் பேச்சாளர்களும் சலிவடையாமற் பேசியதும் கேட்டதும் குறிப்பிடத்தக்கது.

கட்டாய இந்தியைக் கண்டிப்பதாகவும் மந்திரிசபையின் அடக்குமுறைகளைக் கண்டிப்பதாகவும் இருதீர்மானங்கள், கவர்னருக்கும், எல்லா இந்திய காங்கரஸ் தலைவர்களுக்கும் அனுப்புவதாக முடிவு செய்யப்பட்டது.

(ந—தி)

### அய்யப்பேட்டை

அய்யப்பேட்டை, ஜூலை, 2

அய்யம்பேட்டையை அடுத்த பசுபதி கோவிலில் நேற்று இந்தி எதிர்ப்பு நாள் கொண்டாடப் பெற்றது. மாலை 5 மணிக்குப் பசுபதி கோவில் சு. ம. சங்கத்திலிருந்து உண்ணாவிரத வீரர் தோழர் ஸ்டாலின் ஜகதீசன் அவர்கள் படத்துடன் கறுப்புக் கொடி ஊர்வலம் ஒன்று புறப்பட்டு, இந்தி வீழ்க! தமிழ் வாழ்க! ஸ்டாலின் வாழ்க! எதேச்சாதிகாரம் ஒழிக! என்ற கோஷத்துடன் நான்கு வீதிகளையும் சுற்றி வந்து 6 மணிக்குக் கூட்டம் நடக்கும் இடமாகிய வடக்குத்தெரு பிள்ளையார் கோவில் முன்பு வந்து சேர்ந்தது.

கூட்டத்திற்கு இலுப்பக்கோரை தோழர் எ. அய்யாறு பிள்ளை தலைமை வகித்தார். தோழர் எ. சுப்பையா பிள்ளை இந்தி எதிர்ப்புப் பாடல்கள் பாடினார். இந்தியை எதிர்த்துத் தோழர்கள் தஞ்சை தேவ், சு. செந்திருவேலு, வி. சுயம்புலிங்கம், எம். குப்புசாமி, வித்துவான் அன்பு கணபதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இந்தியை எதிர்த்தும் ஆச்சாரியாரின் அடக்குமுறைகளைக் கண்டித்தும் தமிழ்வீரன் ஜகதீசனைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு செயலாளர் தோழர் ஜி. சந்தாமூர்த்திவந்தனங்கூற இரவு 9 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது. (ந—தி)

### கந்தலிகிராமம்.

(நமது நிருபர்)

திருப்பத்தூர், ஜூலை. 1-

திருப்பத்தூர் கந்தலிகிராமத்தில் இந்தி எதிர்ப்பு நாளை நன்னாளாகக்கொண்டாடும் பொருட்டு சில வர்த்தகர்கள் கடைகளை மூடியும் வேலை நிறுத்தம் செய்தும் துக்கம்கொண்டாடப்பட்டது.

30-6-38ல் ஹிந்தி எதிர்ப்புக்கு நன்கொடை ரூ. 6-1-0 அனுப்பியிருக்கின்றது.

### மதுரை

(நமது நிருபர்)

மதுரை, ஜூலை 2

நேற்று மாலை 7 மணிக்கு மதுரை ஜில்லா இந்தி எதிர்ப்புக் கமிட்டியின் ஆதரவில் மதுரை டவுன் பெருமாள் கோவில் முன்பாக இந்தி எதிர்ப்பு நாள் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. மதுரை நகர முஸ்லிம் லீக் காரியதரிசி ஜனாப் அப்துல் லத்திப்கான் சாயபு பகதூர் தலைமை வகித்தார்கள். மதுரை நகரசபை அங்கத்தினரும், முஸ்லிம்களின் தலைவருமான சின்னக்காஜியார் இப்ராகிம் சாகிப் பகதூர் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளையும், பாண்டிய நாட்டையும், அதன் பாஷையாகிய தமிழின் பெருமையைப் பற்றியும் சரித்திரப் பூர்வமாக விளக்கியும் கட்டாய இந்தியினால் தாய்பாஷைக்கு ஏற்படப்போகிற கெடுதிகளைக் குறித்தும் மிக விளக்கமாகப் பேசியதுடன் ஆச்சாரியாரின் அடக்குமுறைக் கொள்கைகளைக் கண்டித்து உபமானக் கதையொன்றின் மூலம் பொது மக்களுக்கு எடுத்துக்காட்டி அடியில் கண்ட தீர்மானத்தைப் பிரேரேபித்தார்கள்.

1. மதுரை நகரவாசிகளடங்கிய இப்பொதுக் கூட்டம் கட்டாய பாடமாக இந்தியை 1, 2, 3வது பாரங்களில் வைத்திருக்கும் மந்திரிசபையின் செய்கையைக் கண்டிக்கிறது.

2 கட்டாய இந்தியை எதிர்த்து, சென்ற 62 நாட்களாக உண்ணாவிரதமிருந்து வரும் தோழர் ஸ்டாலின் ஜெகதீசன் அவர்களின் மனோவுறுதியைப் பாராட்டுவதுடன் கட்டாய இந்தியை எதிர்த்து சென்னை பிரதம மந்திரியின் வீட்டிற்கு முன்பாக மறியல் செய்து சிறைசென்றிருக்கும் தொண்டர்களையும் பாராட்டுகிறது.

காங்கரசால் பலமாகக் கண்டிக்கப்பட்டுவந்த கிரிமினல் திருத்தச் சட்டத்தின் மூலமாகவே காங்கரஸ் கட்சி பிரதம மந்திரி இந்தி எதிர்ப்பாளர்களை அடக்கி வருவதைக் கண்டுவருந்துவதுடன் அகில இந்தியக் காங்கரஸ் மகா சபைத் தலைவரின் கவனத்துக்குக் கொண்டுவந்து பிரஜா உரிமையைக் காப்பாற்றுமாறு இந்தி எதிர்ப்புத் தலைவர்களை இக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

இதை ஆமோதித்து தோழர் ஏ. எஸ். அருணாசலம் பேசுகையில் ஆச்சாரியாரின் அடக்குமுறைகளைத் தெளிவாக எடுத்துக்கூறி, காங்கரஸ் கட்சியிலுள்ள சில காலிகள் இந்தி எதிர்ப்பாளர்களுக்குச் செய்துவரும் கெடுதிகளையும் சொல்லி இதையெல்லாம் முழு மனதுடன் வரவேற்று இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபடுகிறவர்கள் மீது பொதுஜன ஆதரவு கொடுக்கவேணுமாய்க் கேட்டுக்கொண்டார். தலைவர் தீர்மானத்தை ஓட்டுக்குவிட்டு எதிர்க்கிறவர்கள் யாராவது இருந்தால் கைதூக்கலாம் என்றதும் மூன்றுபேர் கைதூக்கவும் சாதகமாகப் பலத்த கரகோஷத்துடன் எல்லோரும் கைதூக்கவும் தீர்மானம் நிறைவேற்றியதாகக் குறிப்பிட்டு முடிவுரையாக சில வார்த்தைகள் கூறினார். தோழர் ஏ. எஸ். அருணாசலம் வந்தனோபசாரம் கூறியவுடன் கூட்டம் கலைந்தது. கூட்டத்தில் குழப்பம் செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு வந்த சில காங்கரஸ் காலிகள் தம் எண்ணம் பலிக்காததால் கூட்டம் முடியு முன்னரே ஒவ்வொருவராக நழுவி விட்டனர். கறுப்புக் கொடி பிடித்தவர்களென்று சும்மா இருக்கிற சில பொது ஜனங்களையும் சில காலிகள் மிரட்டி பயமுறுத்தி வருகிறதாகத் தெரிகிறது. சில சுயமரியாதைத் தோழர்களை பயமுறுத்தி அவர்கள் வீட்டின் கதவுகளில் காலித்தனமான பாஷையில் கடிதம் எழுதி இரவு நேரத்தில் ஒட்டியிருக்கிறார்கள். இது விஷயமாகப் போலீஸ் அதிகாரிகளுக்கு ரிப்போர்ட் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது.

### நீடாமங்கலம்.

நீடாமங்கலம், ஜூலை 2

மாலை 6 மணிக்கு நீடாமங்கலம் தோழர் சீனிவாச பிள்ளை சத்திரத்திற்கு எதிரில் கட்டாய இந்தியும் அடக்கு முறையும் என்பதைக் கண்டிக்குமுகத்தான் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. மேற்படி கூட்டத்திற்கு சுமார் 1000 மக்கள் கூடி இருந்தனர்.

மேற்படி கூட்டத்திற்குத் தலைமை வகிக்க மன்னார்குடி முனிசிபல் கௌன்சிலர் தோழர் கே. ஆர். ஜி. பால் அவர்களின் பெயரை நீடாமங்கலம் தோழர் எஸ். சௌந்திரராஜன் அவர்கள் பிரேரேபிக்க தோழர் கே. சி. ரெங்கராஜன் அவர்கள் ஆமோதிக்க தலைவர் கே. ஆர். ஜி. பால் அவர்கள் தலைமை வகித்து தோழர் சேசயசுந்திர தேசிகர் அவர்களை - இந்தி எதிர்ப்புப் பாட்டுப்பாடும்படி கேட்டுக்கொண்டார். அதன்படி தேசிகர் அவர்கள் இந்தி எதிர்ப்புபாடல்களும் தமிழின் பெருமை என்பதைப்பற்றியும் பாடி முடித்தார். தலைவர் அவர்கள் தஞ்சை கரந்தைதமிழ் சங்கத்தலைவர் ராவ்சாகிப் வி. உமாமகேச்வரபிள்ளை அவர்களை இந்திஎதிர்ப்பு தினம் என்பதைப்பற்றிப் பேசுமாறு கேட்டுக்கொண்டார். அதன்படி பிள்ளை அவர்கள் எழுந்து கட்டாய இந்தியும் அடக்குமுறை என்பதைப் பற்றியும், ஸ்டாலின் ஜெகதீசன் தமிழுக்காக 60 நாள் பட்டினி இருக்கும் நிலைமையைப்பற்றியும்விளக்கமாக எடுத்துரைத்துவிட்டு அமர்ந்தார்.

அடுத்தாற்போல் மாஜிமந்திரி கனம் சர். எ. டி. பன்னீர்செல்வம் அவர்கள் எழுந்து கட்டாய இந்தியும், அடக்குமுறையும், நாம் ஏன் கண்டிக்க வேண்டுமென்றும் அதனால், நம் தமிழர்களுக்கு ஏற்படும் கெடுதியும் சட்டசபையில் வீற்றிருக்கும் நமது ஜில்லா எம். எல். ஏ. அவர்கள் நடந்து கொண்ட நேர்மையற்ற தன்மையும் கண்டித்து சுமார் ஒரு மணி நேரம் பேசி விட்டு முடிவாக தமிழர்கள் எல்லோரும் எந்தக் கட்சியைச் சார்ந்தவராயினும் சரி இது சமயத்தில் தமிழர்களுக்கு நேரக்கூடிய ஆபத்தை ஒழிக்க ஒன்று சேர்ந்து ஒத்துழைக்குமாறு பேசி முடித்தது.

தலைவர் முடிவுரையில் நாம் ஏன் இன்று ஆச்சாரியார் மந்திரிசபையைக் கண்டிக்கவேண்டுமென்றும், மந்திரி சபையார் செய்துவரும் சர்வாதிகார ஆட்சியைக் கண்டித்தும், நம் தமிழ் மக்களிடம்ஓட்டுவாங்கிக்கொண்டு, ஆச்சாரி மந்திரி சபைக்கு அடிமைகளாக (பொம்மைகளாக) இருக்கும் எம். எல். ஏயைக் கண்டித்தும் அவர்களை ராஜினாமாசெய்யும்படியும் பேசி முடித்தார்.

அதன்பிறகு உமாமகேச்வர பிள்ளை அவர்கள் இந்தி மொழியைக் கண்டித்தும், சர்க்கார் கையாளும் அடக்கு முறைகளைக் கண்டித்தும், இந்தி கட்டாய பாடமாகவிருக்கும் பள்ளிகளுக்கு மாணவர்களை அனுப்பக்கூடாதென்றும் தீர்மானங்கள் நிறைவேறிய பின் கூட்டம் கலைந்தது.

(ஒ. கி.)

### கோயமுத்தூர்.

கோயமுத்தூர், ஜூலை 2.

சென்னைமாகாணத் தமிழர் சங்கக் காரியதரிசியின் சுற்றிக்கையின்படி ஜூலை 1-ந் தேதி இந்தி எதிர்ப்புநாள் கோவையில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்று சாயந்திரம் நான்குமணிக்கு கோவை டவுன் ஹாலிலிருந்து கோவை முனிசிபல் கவுன்சிலர் தோழர் முத்துநாயுடு தலைமையின்கீழ் ஒரு கறுப்புக்கொடி ஊர்வலம் தமிழ் வாழ்க, இந்தி வீழ்க, அக்கிரகார மந்திரிசபை வீழ்க, பார்ப்பனீயம் வீழ்க, அடக்குமுறை வீழ்க என்ற கோஷத்துடன் புறப்பட்டு பல முக்கிய தெருக்களின் வழியாக வந்து டவுன் ஹாலில் முடிந்தது. அந்து ஹேண்டுப் பிரசுரத்தில் தெரிவித்தபடியே முனிசிபல் கவுன்சிலர் தோழர் முத்துநாயுடு அவர்களின் தலைமையின்கீழ் தோழர் அனுமந்தராவ் நீண்ட கரகோஷத்தினிடையே எழுந்து ஆச்சாரியாரின் யதேச்சாதிகாரத்தைக் கண்டித்துக் கட்டாய இந்தியின் சூழ்ச்சியை விளக்கியும் இந்தி எதிர்ப்பின் போரால் சிறைப்பட்ட தோழர்களை வாழ்த்தியும், கட்டாய இந்தியை எதிர்த்து 62 நாட்களாக உண்ணாவிரதமிருந்து வரும் தோழர் ஸ்டாலின் ஜெகதீசனைப் பாராட்டியும் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் காங்கரஸ்சர்க்கார் குதிரைப் போலீசைக்கொண்டு கூட்டத்தைக் கலைத்து பொதுஜனங்களுக்கு தொந்தரவு விளைவித்த கனம் ஆச்சாரியாரின் மந்திரிசபையைக் கண்டித்தும் மிக உருக்கமாக 1½ மணிநேரம் பேசினார்.

பிறகு ஜனாப் முகமது முத்து இன்னும்பலதோழர்களும்பேசியபின் டாக்டர் பி. எ. நடேசன் அவர்களால் கட்டாய இந்தி பாடத்தைக் கண்டித்தும் சிறைபட்ட தோழர்களை வாழ்த்தியும் ஸ்டாலின் ஜெகதீசனைப் பாராட்டியும் காங்கரஸ் மந்திரி சபையைக் கண்டித்தும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு தலைவரால் வந்தன உபசாரத்துடன் கூட்டம் இனி கலைக்கப்பட்டது. (ஏ. கி.)

### விருதுநகர்.

விருதுநகர், ஜூலை 2

இந்நகர் இந்தி எதிர்ப்புக்கமிட்டியார் ஆதரவில் 1-7-38 மாலை 5 மணிக்கு நாடார் பரிபாலன சங்கத்திலிருந்து தோழர் ப. வ. விநாயக மூர்த்தி தலைமையில் சுமார் 300 தொண்டர்கள் கறுப்புக் கொடிகளுடன் நகரின் பல முக்கிய வீதிகளின்வழியாக ஊர்வலம் வந்து இரவு7 மணிக்கு நெல்கடை மைதானத்தில் மேற்படியார் தலைமையில் பொது கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு சுமார் 2000 பேர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

அதுசமயம் தோழர்கள் மகாலிங்கம், அருணாசலம் இருவரும் முறையே 'இந்தி எதிர்ப்பு' 'ஆச்சாரியின் ஹிட்லரிசம்' என்பதுபற்றி விரிவாகப் பேசினார்கள்.

கடைசியாக தோழர் உத்தமன் அவர்களால் தமிழ் வீரர்ஜகதீஸ் அவர்களின் இறுதிவேண்டுகோள் கூட்டத்தில் படிக்கப்பெற்றது. பின் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றி அத்தீர்மானங்களை தந்திமூலம் சென்னை கவர்னர், இந்திய வைஸ்ராய், இந்தியா மந்திரி, அகில இந்திய காங்கரஸ் தலைவர் ஆகியவர்களுக்கு தலைவர்மூலம் அனுப்புவதென்றும் முடிவுசெய்து இரவு 9 மணிக்குக் கூட்டம் முடிந்தது.

#### தீர்மானங்கள்.

1. இந்தியைக் கட்டாயப் பாடமாக வைக்கவேண்டிய அவசியத்திற்குச் சென்னை முதன் மந்திரி கூறிவரும் சமாதானம் ஏற்றுக்கொள்ளத் தக்கதாயில்லை. ஆனதால் சென்னை அரசாங்க மந்திரிசபையார் முதல் மூன்றுபாரங்களில் இந்தி கட்டாயப் பாடமாக வைத்திருப்பதை விருதுநகர் மக்களடங்கிய இக் கூட்டம் இன்னும் வன்மையாக எதிர்க்கிறது.

2. இந்திஎதிர்ப்பு இயக்கத்தை ஒழிப்பதற்காக காங்கரஸ் மந்திரிகள் செய்துவரும் அடக்கு முறையை இக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது. மந்திரிகள் கையாண்டுவரும் முறைகளை மனித சமூகத்தின் பிரஜா உரிமைக்குப் பங்கம் விளைவிக்கத் தக்கதாயிருப்பதால் மந்திரிகளின் செய்கையில் கவர்னர் பிரபுவும் அகில இந்தியக் காங்கரஸ் கமிட்டியும் தலையிட்டு நிறுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறதென்றும் ஸ்டாலின் உண்ணாவிரதத்தைப் பாராட்டுவதாகவும் தீர்மானங்கள் நிறைவேறின.

(ஒ. கி.)

## சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

நமது "விடுதலை" பத்திரிகைக்கு சந்தா செலுத்துகிறவர்கள் அநேகமாக மாத சந்தாவாகவும், மூன்று மாத சந்தாவாகவும் தான் செலுத்தி வருகிறார்கள். இதனால் அவர்களுக்கு ஒவ்வொரு தடவையிலும் இரண்டணா மணியார்டர் கமிஷன் கொடுக்க நேரிடுகிறது. எங்களுக்கும் மேற்படியார்களின் விலாசங்களை, மாத சந்தாவாக இருப்பதால் அச்சடித்து அனுப்ப முடியாமல் எழுதி அனுப்பவேண்டியதாக இருக்கிறது. ஆகவே இருபாலரின் சௌகரியத்தை உத்தேசித்து, 'விடுதலை'யின் சந்தாவைக் குறைத்து இருக்கிறோம். அன்பர்கள் இனிமேல் அனுப்பும் சந்தாவை வருட சந்தாவாகவோ, அல்லது அரை வருட சந்தாவாகவோ அனுப்பிக்கொடுத்தால், அவர்களுக்கும் மணிபார்டர் கமிஷனிலும், சந்தாவிலும்ஆதாயம் ஏற்படுவதோடு எங்களுக்கும் மேற்படியார்களின் விலாசங்களை அச்சடித்து அனுப்புவதற்கு வசதியாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

### குறைந்த சந்தா விகிதம்.

வருஷ சந்தா ரூ. 7—8—0.

6மாத சந்தா ரூ. 3-12—0.

மானேஜர்.

**ஸ்டாலின் ஜெகதீசன் உண்ணாவிரதம் இன்றைக்கு 65ம் நாள்.**

இரத்த விர்த்திக்கும், தாது பலத்திற்கும்
**ஆஜம் டானிக்**
உந்திரவாதமுள்ள மருந்து. பாட்டில் 1-க்கு விலை ரூ. 1—8—0.

சகல வாய்வு நோய்களையும் தீர்க்க
**சுல்தான் பேதி ஹல்வா**
கைகண்ட மருந்து. விலை கால்சேர் ரூ. 1—0—0.

விலாசம்:— ஆஜம் பார்மஸி, வேலூர். (N.A.)

Printed and Published by ...